உ

சிவமயம்.

# இளையனார்வேலூர்

# எமகவந்தாதி

இஃது

ஷ தேவஸ்தானம் தர்மகர்த்தாக்களிலொருவராகிய

ம-ள-ள-ஸ்ரீ

வெ. செ. முத்துக்குமாரசாமிமுதலியார்

கேட்டுக்கொண்டபடி,

சிங்கிராபாக்கத்தில்வசிக்கும் வழூர்நாயகமரபிற்சிறந்த

ஒழுக்கபாக்கம் வித்துவான்

ம-ள-ள-ஸ்ரீ

## கா. சிவசங்கரதேசிகரால்

இயற்றப்பட்டு,

மேற்படி தேவஸ்தானஓதுவார்;

புல்லம்பாக்கம்

ம-ள-ள-ஸ்ரீ

## கா. சிவஞானதேசிகரால்,

காஞ்சீபுரம்

சந்திரபானு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1889ஆம் நவம்பர்மீ 1உ

காஞ்சீபுரம்

பச்சையப்பமுதலியார் பாடசாலை உபாத்தியாயர்

ம-ா-ா-ஸ்ரீ.

# வ. கணபதிப்பண்டிதரவர்களியற்றிய

## சிறப்புப்பாயிரம்.

### நேரிசையாசிரியப்பா.

மண்டலமதனுள் வளமலிந்தோங்குந்
தொண்டைநன்னாடெனத் தொல்கவிவாணர்
சிரமிசைக்கொள்ளுபு சீர்தரநள்ளுபு
வரமிசைத்தாலென வந்துவாசஞ்செயூஉச்
சாகராம்பாலன சர்சனசங்கப்
பாகராம்பெரியவர் பாங்குறவுரைக்கும்
தாலாரணியச்சார்பினிலோங்கும்
பாலாரணியமாம்பண்புடன்றிகழும்
ஒழுக்கப்பாக்கத் துயர்சைவநன்னெறி
வழுக்கப்பாங்கொரீஇமன்னியபெரியோன்
மரபினிலோங்கிய வழூர் நாயகந்தனில்
விரவியசீர்சால் வித்தகனாகிய
சிதம்பரதேசிகன் செல்வமார்தோன்றல்
இதம்பெறு சிவசங்கர தேசிகனிவன்
இளையனார்வேலூரிருந்தடியாரினல்
களையனார் வேலைக்கடவுளாமறுமுகன்
குருபரன்மீது கோதிலாயமகம்
மருவுமந்தாதி மண்டலமதிக்க
இயற்றின னின்ன லெல்லாம்
மயற்றிறமோடு மடிக்குவானினைந்தே.

சிந்திராபாக்கம் மைலூப் காலேஜ்
தமிழ்ப்பண்டிதர்
சி. அருணாசலம்பிள்ளையவர்களியற்றிய
நேரிசையாசிரியப்பா.

பொற்றுணர்மலிதரு கற்பகநிழற்கீழ்
அவிரொளிபரப்பு நவமணிகுயிற்றிய
சிங்கந்தாங்கும் பொங்கியதவிசுறீஇச்
சாமரையிரட்டக் காமரங்கேட்
டரிமதர்மழைக்க ணரிவையர்நடங்கண்
டிருந்தரசியற்று புரந்தரன்முதலா
விண்ணவரெல்லாங் கண்ணீருகுத்துச்
சரணஞ் சரணஞ் சரவணபவனே
ஏழையடியேம் பீழைகேண்மோ
மடலவிழ்கடப்ப நடைமயிற்பரிய
தேவ தேவே கோவேசரணம்
கதியே மதியே விதியே பதியே
குகனேசிவனார் மகனேமுறையோ
சூரனியற்றுங் கோரம்பொறேம்
என்றென்றரற்றத் தன்றுபேரருளாற்
காற்படைக்கொடிநிறீஇ வேற்படைவிடுத்து
வரமதிலுயர்ந்தோ னுரமதுபிளக்கக்
கண்டுளங்களிகூர்ந்தண்டர்கள்குழுமித்
தாவாத்துன்பறுத் தோவாவின்பருள்
எங்குருநாத வெங்குருவேந்தே
உள்ளத்தூறுந் தெள்ளியதேனே
விழுமியவுன்றாள் தொழுமடியேஞ்செய்
பூசனைகொண்டுண் மாசதுகழுவென
இம்பருமுய்ய வும்பரார்நயந்து
பொற்புடனிறுவிய பற்பலகோயிலே

அவற்றுள்

பைந்திரையுடுத்தவ சுந்தரமங்கையின்
நகைநிலவெறிக்குந் தகைமுகமெனமிளிர்த்
தண்டகநாட்டிற் கண்டகநாட்டும்
ஒண்பிறைநுதலிற் கண்கவர்திலகமே
என்னப்புலவர் பன்னிவியப்புறத்
தளையவிழ்மரைமேல் வளைமுத்தீனும்
வளவயன்மருதத் திளையனார்வேலூர்க்
கழிபெருங்கருணை கெழுமியகோயிலு
ளருச்சனைசெய்வார் குறிச்சவராந்தர

மன்னியமுருகன் பொன்னடிக்கன்பாய்ப்
பழுதறுநால்வகை விழுமியசொன்மலர்
மாணத்தொடுத்துக்காணும்யமக
அலங்காரங்கொள அலங்காரம்மா
அந்தாதியொன்று நந்தாதியற்றினன்
அன்னவனின்னெனப்பன்னக்கேளீர்
திருவினுஞ்சிறந்தவுருவிற்பொலிந்த
சிற்றிடைபடைத்த பொற்றொடிநல்லார்
தன்னடைக்கஞ்சிய மென்சிறையன்னங்
கண்படுகமலமுங் கண்படுகுவளையு
நிறைதரமலர்ந்த துறைநீர்த்தடத்துக்
கருமுகில்கடுக்கும் பெருவாய்மேதி
முழக்கொடுபாய்ந் துழக்கவெரீஇக்
கட்டிளவாளை முட்டியெழூஉப்
பாய்தலினிடையறா தோய்வறவொழுகுங்
குடக்கனித்தேனு முடக்கியபைங்குலைக்
கதலிக்கனியின் பதமுறுநறவுந்
தீங்கனியென்னு மாங்கனிச்சாறும்
அளவளாஅய்ப்பெருகிக்குளம்பலநிரப்பிச்
செஞ்சாலிவளர்க்கு மெஞ்சாவளஞ்சால்
ஒழுக்கவாக்க வழுத்துபேரூரினான்
வழுவறுவழுவூர்த் தழுவிச்சிறந்த
நாயகமரபிற் றாயகம்போல்வான்
சான்றோர்கவியெனஆன்றாழ்ந்தெங்கும்
பம்பியவெள்ளக்கம்பைமாநதியிற்
றாயீன்றறியா வேயீன்றதோளி
தழுவக்குழைந்த முழுதுணர்தம்பிரான்
பதம்பரவுறூஉஞ் சிதம்பரதேசிகன்
நற்றவப்புதல்வன் கற்றோர்நண்பன்
செந்தமிழ்ப்புலவர் சந்ததம்மகிழ
ஒல்லுவதன்னா வில்லையென்னாமே
மனமொழிமெய்களாற் கனமுறவுதவும்
வண்மைபொறுமையுண்மையுடையன்
நற்பொருணூலொடு கற்பவர்க்குவந்து
சோதிடநூலும் ஓதிடவல்லோன்
தத்துவாதீதச் சுத்தசைவன்
சமயம்விசேட மமைநிருவாணம்
உய்தரவெவர்க்குஞ் செய்திடுந்தேசிகன்
பவசங்கமமொழி சிவசங்
கரனெனப்புகலும் வரநாவலனே.

## சாற்றுக்கவிகள்.

பிரமபீடம் நிஜானந்த சுவாமிகளது
மரபிற்குரிய
புலத்தியபுரம் ம-ா-ா-ஸ்ரீ.
அச்சுததாஸரவர்கள்
இயற்றிய
எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

பொன்னவிருநாயகனுடனுறையும் பூம்பொழிலிளையனூர்வேலூர்
மன்னியசெவ்வேண்மலரடி யேத்திமாசிலாயமகவந்தாதி
யுன்னருமன்பாலுரைத்தனனமலவொழுக்கபாக்கஞ் சிதம்பரமா
றன்னரும்புதல்வனுகிய சிவசங்கரனெனுந்தவசிரோமணியே.

ம-ா-ா-ஸ்ரீ.
பேறை-தசாவதானம்.
செகநாதப்பிள்ளையவர்கள்
இயற்றிய
அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மணம்பூத்த தண்டலைசூ ழிளையனூர் வேலூர்வாழ் வடிவே லற்குப்
பணம்பூத்த பேரரவும் வாணனுந்தஞ் சிரகரகம் பனஞ்செய் வானல்
வணம்பூத்த சிகந்தநகர் வளரும்வழூர் நாயகமா மரபில்வாய்ந்த
குணம்பூத்த நங்கள்சிவ சங்கரதே சிகன்யமகங் கூறினனல்.

வெண்பா.

தொட்ட கரமணக்குஞ் சொல்லியநாவும் மணக்குந்
திட்டமுடன் கேட்டசெவிமணக்கு—மிட்டத்
திரமியைந்த நங்கள் சிவசங் கரன்சித்
திரயமக வந்தாதியை.

ஸ்ரீ சாற்றுக்கவி.

திருநெல்வேலிஜில்லா

ஊற்றுமலைச்சமஸ்தானவித்வான்களிலொருவரும்

ஸ்ரீமத். தண்டபாணிசுவாமிகள்மாணுக்கருமாகிய

## தி. கந்தசாமிப்புலவரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

தினந்தினந்த வசிகள்பணி யிளையனூர்வேலூர்வாழ் செவ்வேட்காமுந்
தினந்தினந்த வனமழியா தருண்முதல்வன்றுணைவனுக்குத்திகம்பரத்தா
தினந்தினந்த வதேசிகனென் றகமகிழுமுருகனுக்குத்தெள்ளன்பாய்மோ
தினந்தினந்த வழுமலர்ப்பூந்தடஞ்செறியு மதிவளமைச்சிகிந்த்ரா பாக்கம்.

யமகவந்தா திருடனடவெனும்வழூர்நாயகமரபோன்யாணர்க்கேக
யமகவந்தா திணர்த்துடவைசூழொழுக்கப் பாக்கமெய்மை யானவேணி
யமகவந்தா திகலில்சிவ சங்கரதேசிகனதின யத்தேன்போல
யமகவந்தா தியெனுமியன் மாலையியற்றிப்புனைந்தேயருள்பெற்றனே.

மா-ா-ா-ஸ்ரீ.

அஷ்டாவதானம்.

## பூவை. கலியாணசுந்திரமுதலியாரவர்கள்,

இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

இந்தாதி தகைதுடவை சூழிளையனூர் வேலூரினிதுமேவு
மந்தாதி யியலாதநம்சுப்ரமணியரிணை யடியிலார
வந்தாதி யமகமதிற்பலவணி கண்மிக வியங்கவனைந்திட்டானல்
பந்தாதி யிகலிரித்தசிவசங்க்ர தேசிகனும்பாவலோனே.

:o:

அரன்வாயல் ம-ா-ா-ஶ்ரீ.

## திரு. வயித்தியநாததேசிகரவர்களியற்றிய

### இருபத்தெண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமருவு மாழியைக் கலையென வுடுத்தபுவி
தேவிநுத றிலகமாகித்
திகழ்மது நிறைந்தொழுகு துணர்மாரி பொழிசோலை
செறியிளையன் வேலூரெனச்
செப்பிடுஞ் சோழரா ஜேந்த்ரபுரி தனின் முனாள்
செய்தகாசிபன் வேள்வியைச்
சென்றழித் திடுமவுண குலமலையன் மாகறன்
செற்றிடச் செய்வா யெனத் ௧
தருமருவு மிமயமலை யுமைமருவு சிவபிரான்
றனைநினைந் திருடிவா டத்
தண்ணருள் சுரந்தெமிறை யண்ணல்முரு கேசனைச்
சற்று மஞ்சாமலே யத்
தானவரை நின்னயிற் கிரையாக்கி வருகெனத்
தந்தவுரை கொண்டயில் கரந்
தாங்கிமயி லூர்ந்தவுண ரேங்கியுயிர் நீங்கத்
தழைத்து முனி யாகமோங்கக் ௨
கரமருவு குக்குடக் கொடியனக் கொடியர்பாற்
கடுகலொடு செல்ல வவருங்
கண்டுபடை கொண்டெதிர் புகுந்துவரு காளைமேற்
கணைபல விடுத்திடலும் வேள்
கையிலகு வேல்விடத் துட்டருயி ருண்டுவே
கத்துடன் செலவே யதைக்
காணுமலிளையன் கடம்பவன நண்ணிமுக்
கட் கடவுளருளாற் குரா ௩
மரமருவு வேலினைக் கைக்கொண்டு தங்குமறு
மாமுகக் கடவுண்மீது
வண்டமிழி னல்யமக வந்தாதி சொற்றனன்
மாசிகந்த்ரா பாத்தினில்
வாழ்தரு வழூர்நாய கன்மரபில் வருசீர்மை
வாய்ந்திடு மொழுக்கபாக்கம்
வல்லகவி வாணர்புகழ் சிவசங்கரப்பெயர்
வதிந்த தேசிகதூயனே. (1)

உ

# விளம்பரம்.

இதனால்சகலருக்குந்தெருவிப்பது யாதெனின் இளையனார்வேலூர் யமகவந்தாதி இயற்றிய சிகிந்திராபாக்கத்தில்வசிக்கும் வேளூர்நாயகமரபிற் சிறந்த ஒழுக்கபாக்கம் வித்துவான் ம-௱-௱-ஸ்ரீ கா. சிவசங்கரதேசிகரால் ஷை இளையனார்வேலூர் ஸ்தலபுராணத்தையும் சீர்திருத்தி பொழிப்புரையோடு அச்சிற்பதிப்பிக்கவேண்டி, பல ஏட்டுப்பிரதிகளைச்சேர்த்து ஷை யாரிடங் கொடுத்திருக்கின்றேன்; கூடியசீக்கிரத்தில் அப்புராணம் வெளியிடப்படும்.

இங்ஙனம்.

1889௵ நவம்பர்மீ 1௳ } வெ. செ. முத்துக்குமாரசாமிமுதலியார்

ஷை தேவஸ்தானம் தர்மகர்த்தர்.